1974 ஏப்ரல் 9]

பெண்ணேயாற்றின் குறுக்கே பாலம்

* 791 வின—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள பெண்ணேயாற்றில் திருவரங்கத்திற்கும், மணலூர்பேட்டைக்கும் இடையில் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலேயில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) திருவரங்கத்திற்கும் மணலூர்பேட்டைக்கும் இடையே பெண்ணேயாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு நெடுஞ்சாலே கிராமப் பணித்துறை தலேமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

Harbour Development Project.

* 792 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Government of Tamil Nadu have written to the Central Government to the effect that any further extension of Madras Harbour would affect the beauty of Marina beach; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லே.

(இ) இக்கேள்விக்கு இடமில்லே.

Assignment of lands in Tiruttani taluk.

* 793 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the pattas (D. Forms) given to the Landless during the visit of the Hon. Chief Minister to Tiruttani taluk in 1970 and in January 1973 have not been carried to the village accounts; and

(*b*) ifso, the reasons therefor?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை

வடகரை கிராமத்திலுள்ள மரங்கள்

*** 794 வினா—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் திருவாடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இனாம் வடகரை கிராமத்திலுள்ள 10 ஆயிரம் பனை மரங்களை வெட்டி எடுத்துக்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளதா ?

(இ) அதனைத் தடுத்து நிறுத்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் இந்த திருவாவடுதுறை ஆதீனத்திற்கு சொந்தமான இனாம் கிராமங்கள்—வடகரை, அரசப்பட்டி என்ற இரண்டு கிராமங்கள் 63 இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் மேஜர் இனாம் கிராமங்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளன. அதை எதிர்த்து அவர்கள் கேஸ்போட்டு, ஒரு கிராமம் மைனர் இனாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அந்த கிராமத்திலுள்ள சுமார் 3,000 பனை மரங்களை போலீஸ் உதவியுடன் வெட்டியிருக்கிறார்கள். இன்னொரு ஊரிலுள்ள பனை மரங்களையும் வெட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் 300 பனை மரத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இனிமேல் வெட்டாமல் இருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? இப்பொழுது வெட்டப்பட்ட 3,000 பனை மரங்களுக்கும் நஷ்டயீடு வசூலிக்கப்படுமா ? அவர்கள் செய்த சட்ட விரோதமான செயலுக்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம் இனாம் வடகரை கிராமத்தில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான சுமார் 1,500 பனை மரங்களை மரம் ஒன்றுக்கு 13 ரூபாய் வீதம் விற்பனை செய்திருக்கிறார்கள் என்பது உண்மை. அதற்குக் காரணம் அந்த மரங்கள் பலன் தரவில்லை, பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 1936-ம் ஆண்டு கும்பகோணம் துணை நீதிமன்றத்தில் இந்த ஆதீனத்திற்கு ஒரு நிர்வாகத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதன்